People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

23.4.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 16.4.2011 முதல் 22.4.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**16-4-2011 முதல் 22-4-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 10 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 42 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 9 |
| 5. | வகுப்பறை வன்முறை | – |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 1 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 2 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | 3 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 8 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டபஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 17. | மணல் கொள்ளை | 1 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | – |
| | மொத்தம் | 69 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-16
## 16.4.2011 முதல் 22.4.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1016. | 16.4.2011 | **கோவை மாவட்டம்:** பேரூர் கோவில் தெப்பக்குளம் அருகே பிறந்த ஆண் குழந்தை துணியில் சுற்றியபடி இறந்து கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக் கொலை | தீக்கதிர் |
| 1017. | 16.4.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** ஆலங்குடியை அடுத்த கருக்காக் குறிச்சியில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினத்தை முன்னிட்டு அம்பேத்காரின் உருவப்படத்திற்கு மரியாதை செலுத்திய தலித் மக்களை ஆதிக்கச் சாதியினர் தாக்கி சித்திரவதை. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1018. | 16.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகேயுள்ள பழைய ஒக்கப்பட்டியைச் சேர்ந்த தர்மலிங்கம் மனைவி மணிமேகலை(19). மின் கட்டணம் செலுத்தச் சென்ற மணிமேகலையைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1019. | 16.4.2011 | **சென்னை மாவட்டம்:** ஒரிசா சுந்தர்கர் மாவட்டத்தில் பமாதேகா கிராமத்தைச் சேர்ந்த 15 இளம் பெண்கள் சென்னை தொழிற்சாலையில் வேலை செய்தனர். தொழிற்சாலையில் பணிபுரிந்து பெண்களை கொத்தடிமைகளாக நடத்தியதோடு போதிய சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றியதாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொத்தடிமை | தினகரன் |
| 1020. | 16.4.2011 | **காரைக்கால் மாவட்டம்:** காரைக்கால் தெற்குத் தொகுதியில் தி.மு.க., சார்பில் எதிர்கட்சி தலைவர் நாஜிம், தே.மு.தி.க., சார்பில் அசனா மற்றும் சுயேச்சையாக பி.கே.கணபதி போட்டியிட்டனர். இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதலில் தே.மு.தி.க., வேட்பாளர் அசனா தாக்கப்பட்டார். காவலர்கள் தடியடி. இருதரப்பைச் சேர்ந்த 56 பேர் மீது வழக்குப்பதிவு | காவல் நிலையச் சித்தரவதை | தினமலர் |
| 1021. | 16.4.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் அருகே பூலுவப்பட்டியைச் சேர்ந்த ஆறுமுகம்(55), மகள் மீனாட்சி(18). பள்ளி விடுமுறையில் பல்லடம் மேட்டுக்கடையில் உள்ள தன் அக்கா ப்ரியா வீட்டுக்கு வந்தார். தோட்டத்தில் பூப்பறிக்கச் சென்ற மீனாட்சியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிணற்றில் பிணமாகக் கிடந்தது. உடலை உடற்கூறாய்வு செய்ததில் அரசு ஊழியர்கள் மீனாட்சியின் மார்பகங்களை அறுத்துள்ளதாக தகவல். | | |
| 1022. | 16.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி தொகுதி வேலாயுதம்பாளையம் புதூரில் ஓட்டுப்பதிவன்று ஓட்டுச்சாவடி அருகே தி.மு.க., அ.தி.மு.க.,வினர் தேர்தல் உதவி மையங்களை அமைத்திருந்தனர். அவற்றை 200 மீட்டர் தூரத்திற்கு அப்பால் எடுத்துச் செல்ல காவலர்கள் வலியுறுத்தினர். பொதுமக்கள் மறுத்ததால் கூட்டத்தை கலைக்க ஆயக்குடி எஸ்.ஐ. திருவானந்தம் தலைமையில் காவலர்கள் தடியடி. தங்கம்மாள்(55), பொன்னுச்சாமி (60), உட்பட 7 பேர் காயம். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1023. | 16.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** தாடிக்கொம்பு அருகேயுள்ள சுக்காம்பட்டியைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஸ்ரீராகவி(17) கல்லூரியில் படித்த தனபால்(19) என்பரைக் காதலித்தார். இரு வீட்டாரும் எதிர்ப்பு தெரிவித்ததால் மனமுடைந்த காதலர்கள் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 1024. | 16.4.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரத்தில் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக வந்த துணை ராணுவ வீரர்கள், விஷ்ணுகாஞ்சி, காவல் நிலையம் எதிரே யாதவா சத்திரத்தில் தங்கினார். மூன்றாம் திருவிழ மண்டபம் தெருவைச் சேர்ந்த பிளஸ் 2 மாணவி தனது சகோதரனுக்கு போன் செய்வதற்காக விஷ்ணுகாஞ்சி காவலர் நிலையம் அருகே வந்தார். குடிபோதையில் இருந்த துணை ராணுவ வீரர் மாணவியிடம் பாலியலுக்கு முயற்சி. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & காவல் நிலையச் சித்தரவதை | தினமலர் |
| 1025. | 17.4.2011 | **நீலகிரி மாவட்டம்:** கோத்தகிரி அருகே உள்ள சோலூர் மட்டம் இப்பகுதியில் உள்ள மாணவர்கள் மீது சிலர் திருட்டுப் புகார் கொடுத்துள்ளனர். மாணவர்களின் மீது புகார் பதிவு செய்யாமல் இருக்க சோலூர் மட்டம் காவல் நிலைய ஆய்வாளர் அலெக்ஸ்சாண்டர் ரூ. 25ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். லஞ்சம் வாங்கும் போது ஆய்வாளர் அலெக்ஸ்சாண்டர் கைது. | காவல் நிலையச் சித்திரவதை & லஞ்சம் | தீக்கதிர் |
| 1026. | 17.4.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டை அருகே முத்துப்பட்டியைச் சேர்ந்த கனி மீனாட்சியை(14) அதே பகுதியைச் முருகன்(24) ஆசை வார்த்தைக் கூறி கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1027. | 17.4.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** மணவாளன்நகர் எம்.ஜி.ஆர் நகர் பகுதியைச் சேர்ந்த தாமோதரன் மகன் ஆனந்தன்(23) நண்பர் சுரேஷ்(23) மற்றும் மஞ்சுளா(35) ஆகியோரை அதே பகுதியைச் சேர்ந்த கணேசன், குட்டி, செந்தில், வெங்கடேசன் குடிபோதையில் தகராறு செய்ததோடு. தாக்கியதாக புகார் கொடுத்தும் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறை தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1028. | 17.4.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** கோவில்பட்டி, நாலாட்டின்புத்தூரை அடுத்த வள்ளிநாயகிபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மனைவி முருகேஸ்வரி சதீஷ் என்பவருடன் மாயமானதாக கிருஷ்ணமூர்த்தி புகார். திருப்பூரில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்ட சதீஷை காவலர்கள் காரில் அழைத்து வரும்போது கிருஷ்ணமூர்த்தி காவலர்கள் கண்முன் சதிஷ் கழுத்தை கத்தியால் அறுத்துக் கொலை செய்தார். பாதுகாப்பு பணியில் கவனக்குறைவாக இருந்த எஸ்.ஐ. ஆறுமுக நயினார், ஏட்டு முருகன் இருவரும் பணியிடைநீக்கம். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1029. | 18.4.2011 | **மதுரை மாவட்டம்:** எஸ்.எஸ். காலனி பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு அருகே பிறந்த ஆண் குழந்தை இறந்து கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக்கொலை | தினமணி |
| 1030. | 18.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் ஒக்கப்பட்டியைச் சேர்ந்த தர்மலிங்கம் மனைவி மணிமேகலை(19). கடைக்குச் சென்ற மணிமேகலையைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1031. | 18.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் பாரதியார்புரத்தைச் சேர்ந்த ராஜபாண்டி மனைவி குணவதி (41). கடைக்கு பொருட்கள் வாங்கச் சென்ற குணவதியைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1032. | 18.4.2011 | **வேலூர் மாவட்டம்:** பாலாற்றில் மணல் அள்ளுவதைத் தடை செய்து ராணிப்பேட்டை சார் ஆட்சியர் ஜெகன்நாதன் உத்தரவு. உத்தரவை மீறி தொடர்ந்து மணல் கடத்தல் நடந்து வருவதால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் சோதனைச் சாவடிக்கு பூட்டுபோட்டனர். | மணல் கடத்தல் | தீக்கதிர் |
| 1033. | 18.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ரத்தினகிரி தஸ்தகீர் ஆற்காடு காவல்நிலைய காவலர்களால் அடித்துச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் (15.4.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 1034. | 19.4.2011 | **சென்னை மாவட்டம்:** ராயப்பேட்டை ரோட்ரிக் நகரைச் சேர்ந்த சீனிவாசன்(30) மனைவி லதா(23). இவர்களுக்கு சர்வேஸ் என்ற 8 மாதக் குழந்தை. கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த லதா குழந்தையை கொன்று தானும் தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 1035. | 19.4.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை செங்குன்றம் அருகே உள்ள பாடியநல்லூரைச் சேர்ந்த கூலித்தொழிலாளி தனபால் மகன் இளையராஜா (21) வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசினர் கலைக்கல்லூரியில் பி.பி.ஏ முதலாம் ஆண்டு படித்து வந்தார். போராட்ம் செய்த மாணவர்கள் மீது காவலர்கள் தடியடி. | மாணவர்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1036. | 20.4.2011 | **கோவை மாவட்டம்:** மதுரை சோழவந்தானைச் சேர்ந்த ராசு மகள் முருகேஸ்வரி அருகில் உள்ள பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்தார். அழகர் இறங்கும் நிகழ்சியை பார்க்க தந்தை அனுமதி மறுத்ததால் மனமுடைந்த முருகேஸ்வரி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 1037. | 20.4.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலைப் புதுக்கோட்டை மேலத்தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் மகள் ரமா(17). பிளஸ் 2 மாணவியான ரமாவை யா. ஒத்தக்கடையைச் சேர்ந்த ராஜ்குமார்(18) கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1038. | 20.4.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறையைச் சேர்ந்த மருதநாயகம் மகள் பாப்பாத்தியம்மாள்(19). அதே பகுதியைச் சேர்ந்த இளமுருகன் இருவரும் காதலித்து திருமணம் செய்தனர். பாப்பாத்தியம்மாளின் பெற்றோர் தாக்க முயன்றதால் நீதிமன்றத்தில் தஞ்சம். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1039. | 20.4.2011 | **சேலம் மாவட்டம்:** ஓமலூரை அடுத்த பூசாரிப்பட்டி செல்லியாண்டி காலனி பகுதியைச் சேர்ந்த மாரியப்பன் மகள் வளர்மதி(17). மாரியப்பனின் உறவினர் முத்து வளர்மதியை பெண் கேட்டு வந்தார். மாரியப்பன் பெண் தர மறுப்பு. ஆத்திரமடைந்த முத்து தாக்கியதில் வளர்மதி மரணம். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 1040. | 20.4.2011 | **மதுரை மாவட்டம்:** சாப்டூர் அருகே உள்ள சில்வார்பட்டியைச் சேர்ந்த வரதராஜா மகள் வரலெட்சுமி(14) 9–ம் வகுப்பு மாணவி. வயிற்றுவலி காரணமாக வரலெட்சுமி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1041. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த தொரப்பாடியைச் சேர்ந்த கோட்டி மகள் துர்கா (எ) அம்மு (17). வயிற்றுவலியால் அவதிப்பட்ட அம்மு தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (11.04.11) |
| 1042. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த நாட்றம்பள்ளி ஒன்றியம் நாராயணபுரம் கல்லுக்குட்டை பகுதியைச் சேர்ந்த கவிதா(30). ஏற்கனவே திருமணமாகி கணவரை விட்டு பிரிந்து வாழும் கவிதா அதே பகுதியைச் சேர்ந்த அருணாச்சலத்துடன் குடும்பத் நடத்தினார். இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த கவிதா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (11.04.11) |
| 1043. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** மீனம்பாக்கம் குமரன் தெருவைச் சேர்ந்த முனுசாமி(30) மனைவி காயத்ரி(30). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த முனுசாமி காயத்திரியின் கழுத்தை கயிற்றால் இறுக்கி கொலை செய்து தானும் தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (13.04.11) |
| 1044. | 21.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை மங்கலம் அருகே உள்ள கானாந்தல் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ்(35) மனைவி விஜயா(30). கணவன் மனைவி குடும்பத் தகராறில் இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். இரு குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவரை ஒருவர் தாக்கியதாக புகார். காயமடைந்த மருத்துவமனையில் அனுமதி. | பெண்கள் மீதான வன்முறை & மோதல் | பாஸ்கர் (14.04.11) |
| 1045. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** மீஞ்சூர் கடப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த குணசேகரன்(22) மனைவி அருணா(18). திருமணமாகி 6 மாதங்களே ஆன நிலையில் சேலையில் தீப்பற்றி அருணா மரணம். ஆர்.டி.ஓ. விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (15.04.11) |
| 1046. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை அடுத்த அக்ராவரம் கிராமத்தைச் சேர்ந்த பாலாஜி மனைவி நித்யா(19). 9 மாத கர்ப்பிணியான நித்யா மரணம். தனது மகளின் மரணத்தில் மர்மம் இருப்பதாக நித்யாவின் தந்தை புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (16.04.11) |
| 1047. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** செய்யாறு அடுத்த ஜோதியம்பாக்கம் கிராமத்தைச் ரோச்ந்த செந்தில்நாதன்(25) மனைவி உமா(18). திருமணமாகி 3 மாதங்களே ஆன நிலையில் உமா சமையல் செய்யும் போது தீப்பற்றி இறந்ததாக புகார். ஆர்.டி.ஓ. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (18.04.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணை. | | |
| 1048. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** அணைக்கட்டு அடுத்த நாராயணபுரம் கிராமத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம்(31) மனைவி சுஜாதா(27). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த சுஜாதா தனது குழந்தையுடன் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (18.04.11) |
| 1049. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆம்பூர் ஆஷாத் நகரைச் சேர்ந்த கவுஷ்(27) மனைவி சல்மா(21). கவுஷ் தனது மனைவிக்கு தெரியாமல் இரண்டாவது திருமணம் செய்ததால் கணவன் மனைவி இடையே தகராறு. மனமுடைந்த சல்மா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (18.04.11) |
| 1050. | 21.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கண்ணமங்கலம் அடுத்த அம்மாபாளையம் கிராமத்தைச் சேர்ந்த 18 வயது இளம் பெண். கண்ணமங்கலத்தில் ஒரு தனியார் மருத்துவமனையில் வேலை செய்த பெண்ணை அத்திமலைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த புரட்சிமணி(23) கடத்திச் சென்றதாக இளம் பெண்ணின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கர் (18.04.11) |
| 1051. | 21.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செங்கம்ரோடு 5வது தெருவில் வசிப்பவர் கோபால் மனைவி சரோஜா(45). வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்த சரோஜா விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (18.04.11) |
| 1052. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** திருவேற்காடு எம்.ஜி.ஆர்.நகர் பிள்ளையார்கோவில் தெருவைச் சேர்ந்த விஜயகுமார்(32) மனைவி சகிலா(30. குழந்தை இல்லாத காரணத்தால் மனமுடைந்த நிலையில் இருந்த சகிலா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (18.04.11) |
| 1053. | 21.4.2011 | **திருவள்ளளூர் மாவட்டம்:** வேப்பம்பட்டு மேட்டுத் தெருவைச் சேர்ந்த சுரேஷ்(24) மனைவி தமிழ்வாணி(22). அதே பகுதியைச் சேர்ந்த முருகேசன், தமிழ்வாணியிடம் ரூ.20.000 கடன் வாங்கி தர மறுத்ததால் இருவருக்கும் எற்பட்ட வாய்த்தகராறில் ஆத்திரமடைந்த முருகேசன் தமிழ்வாணியைத் தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (18.04.11) |
| 1054. | 21.4.2011 | **வேலூர் மாவட்டம்:** செங்குன்றம் தேவகி தெருவைச் சேர்ந்த ருக்குமணி(60) மகன் குமார் (40). தாய் குடிக்க பணம் தர மறுத்ததால் ஆத்திரமடைந்த குமார் ருக்குமணி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரித்ததாக குமார் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் (19.04.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 1055. | 21.4.2011 | **தீருவண்ணாமலை மாவட்டம்:** ஊத்துக்கோட்டை நெல்வாய் கிராமத்தைச் சேர்ந்த ஜெயம்மாள்(45). அதே பகுதியைச் சேர்ந்த குப்பன்(30). இருவருக்கும் எற்பட்ட நிலத்தகராறில் ஆத்திரமடைந்த குப்பன் ஜெயம்மாள் மற்றும் அவரது மகளை அடித்ததாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஜெயம்மாள் குப்பன் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (19.04.11) |
| 1056. | 21.4.2011 | **கோவை மாவட்டம்:** ரத்தினபுரி பாலுசாமி நகரைச் சேர்ந்த விபி விஷ்ணுதாஸ் மனைவி கற்பகம்(22). தனது ஒன்னரை வயது குழந்தையுடன் 13 தேதி வீட்டை விட்டு சென்ற கற்பகத்தைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1057. | 21.4.2011 | **கோவை மாவட்டம்:** ஆர்.எஸ்.புரம் காமராஜ் நகரைச் சேர்ந்த கனகராஜ் மகள் திவ்யா(18). 12ந் தேதி கோவிலுக்குச் செல்வதாக சென்ற திவ்யாவைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1058. | 21.4.2011 | **கோவை மாவட்டம்:** சிங்காநல்லூர் அய்யர் லே–அவுட்டை சேர்ந்த ராஜேந்திரன் மகள் பிரவீணா(23). 4ம் தேதி வீட்டை விட்டு வெளியே சென்ற பிரவீணாவை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1059. | 21.4.2011 | **கோவை மாவட்டம்:** கோவை தொப்பிலியாம்பாளையத்தைச் சேர்ந்த தன்யா யாழினி(22). 18ம் தேதி கல்லூரிக்குச் செல்வதாக சென்ற யாழினியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1060. | 21.4.2011 | **கோவை மாவட்டம்:** சின்னத்தடாகம் மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த செல்வராஜ் மகள் உமா மகேஸ்வரி(18). 9ம் தேதி கல்லூரிக்குச் செல்வதாக சென்ற உமா மகேஸ்வரியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1061. | 21.4.2011 | **கோவை மாவட்டம்:** வடவள்ளி தீருவள்ளுவர் நகரைச் சேர்ந்த ஜெயசந்திரன் மகள் பத்மப்பிரியா (19). துடியலூர் அருகேயுள்ள கல்லூரியில் பி.காம் முதல் ஆண்டு படித்து வந்தார். 11ம் தேதி அதிகாலை வாக்கிங் சென்ற பத்மப்பிரியாவைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1062. | 21.4.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் வில்லாபுரம் ஹவுசிங் போர்டு காலனியைச் சேர்ந்த வில்வமூர்த்தி மனைவி கலாவதி மகள் மீரா சைலஜா(23). சைலஜா இன்சூரன்சு நிறுவனத்தில் ஏஜண்டாக பணிபுரிந்தார். அதே பகுதியைச் சேர்ந்த சரவணன் மற்றும் அவரது நண்பர்கள் 2 பேர் | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீரா சைலஜாவின் வீட்டிற்குள் நுழைந்து அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதோடு கத்தியால் குத்தியதால் படுகாயம். | | |
| 1063. | 21.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் வட்டம் காமனம்பட்டியைச் சேர்ந்த பள்ளி மாணவியை அதே பகுதியைச் ராமராஜ் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம். தப்பி வந்த மாணவி ராமராஜ் மீது புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமணி |
| 1064. | 21.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே சோலைசேரி கிராமத்தைச் சேர்ந்த கருப்பசாமி மகள் மாரியம்மாள்(17). வீட்டில் தனியாக இருந்த மாரியம்மாளை அதே பகுதியைச் சேர்ந்த மாரி கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1065. | 21.4.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரத்தைம் நைனார் கோவில் அருகே உள்ள அக்கிரமேசி கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி மகள் மாதவி(20). அதே பகுதியைச் சேர்ந்த ஒரு வாலிபரைக் காதலித்தார். பெற்றோர் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் மனமுடைந்த மாதவி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 1066. | 21.4.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தைச் சேர்ந்த குமரேசன் மனைவி நாகராணி(77). அழகர் திருவிழாவை பார்ப்பதற்காக ஷெனாய்நகரில் உள்ள தனது தாய் வீட்டிற்கு வந்த நாகராணி தனது சகோதரி முனீஸ்வரியுடன் வந்தார். புளியந்தோப்பைச் சேர்ந்த வேலுச்சாமி மகன் நாகராஜ் (எ) நாகு(27). நகாராணி மற்றும் முனீஸ்வரியை கல்லால் தாக்குதல். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1067. | 21.4.2011 | **மதுரை மாவட்டம்:** ஜெய்ஹந்த்புரம் பாரதியார் ரோடு பகுதியில் அனுமந்தையா மனைவி வசந்தா(70) வீட்டில் ரேசன் பொருட்கள் பதிக்கிவைக்கப்பட்டதாக புகார். பதுக்கிவைக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ரேசன் பொருட்கள் பறிமுதல். | ரேசன் பொருட்கள் பறிமுதல் | தினமலர் |
| 1068. | 21.4.2011 | **திருவாரூர் மாவட்டம்:** திருவெற்றியூர் திரிபுரசுந்தரி நகரைச் சேர்ந்த கதிரேசன் மனைவி சாந்தி(36). சாந்தியின் தோழி தங்கம்மாள் தனது கணவருடன் பேசி பழகியதாக இருவருக்கும் ஏற்பட்ட வாய்த்தகாறில் ஆத்திரமடைந்த சாந்தி தங்கம்மாள் மீது ஆசிட் ஊற்றியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1069. | 21.4.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டையைச் சேர்ந்த ஆறுமுகத்தின் 17 வயது மகள் மதுரை ஒரு தனியார் | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார். ஒத்தக்கடையைச் சேர்ந்த ராஜ்குமார்(18) மாணவியை கடத்திச் சென்றதாக புகார். | & கடத்தல் | |
| 1070. | 22.4.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோட்டைச் சேர்ந்த வள்ளி(35) ஈரோடு எஸ்.பி அலுவலகத்தில் பணிபுரிகிறார். இங்கு பணிபுரியும் அதிகாரிகளால் பெண் காவலர்களுக்கு பாலியல் தொந்தரவு நடைபெறுவதாக வள்ளி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & காவல் நிலையச் சித்தரவதை | தினமலர் |
| 1071. | 22.4.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை கடையநல்லூர் முத்துக்கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த சுப்பையா பாண்டியன் செண்பகவள்ளி மகள் பத்மினி(19) ஆயக்குடியில் இன்ஜினியரிங் கல்லூரியில் முதலாமாண்டு பயின்று வந்தார். செண்பகவள்ளிக்கும் இருமன்குளத்தைச் சேர்ந்த காவலர் ஏட்டு சுந்தரய்யா(45) இருந்த தொடர்பை கண்டித்த பத்மினியை கழுத்தை நெறித்து கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1072. | 22.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் கூட்டுறவு நகர் கம்பர் தெருவைச் சேர்ந்த ஜெயகண்ணன் மனைவி பூங்கோதை(30). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ஜெயகண்ணன் பூங்கோதையின் கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1073. | 22.4.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டை அடுத்த எம்.குன்னத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஆனைக்குட்டி மனைவி லட்சுமி(31) மகள் ஐஸ்வர்யா(7) மகன்கள் ஞானசக்தி(6), அருண் சக்தி(4). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த லட்சுமி தனது இரு குழந்தைகளுக்கு விஷம் கொடுத்து கொன்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1074. | 22.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** மேற்கு மரியநாதபுரத்தைச் சேர்ந்த இம்மானுவேல்(42) முன்விரோதம் காரணமாக இவரையும், அதே பகுதியைச் சார்ந்த ஆட்டோ டிரைவர் ரிச்சர்டை வடக்கு காவல்நிலையத்தை சேர்ந்த காவலர்கள் விசாரணைக்கு அழைத்துச் சென்று விசாரணை. விசாரணையின் போது ரிச்சர்ட் மரணம். பொதுமக்கள் காவல்நிலையம் முற்றுகை. | காவல் நிலைய மரணம் | தமிழ்சுடர் |
| 1075. | 22.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே பள்ளபட்டி முருகன் காலனியைச் சார்ந்த நாராயணன்(60) மனைவி கிரேஸி(56) மாற்றுத்தினாளி மகன் | பெண்கள் மீதான வன்முறை & | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குருசாமி(27). கிரேஸி தனது மகனுடன் தீக்குளித்துத் தற்கொலை. | தற்கொலை | |
| 1076. | 22.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சித்திரை திருவிழாவிற்கு பாதுகாப்பு பணிக்கு தேனி, திண்டுக்கல், திருச்சி, தூத்துக்குடி, மாவட்டங்களில் இருந்து வந்தனர். தூத்துக்குடி பெண் காவலர் வனிதாவுக்கும் மதுரை மகளிர் காவல் நிலைய காவலர் வாசுகிக்கும் நடந்த தகராறில் வாசுகி வனிதாவை தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1077. | 22.4.2011 | **மதுரை மாவட்டம்:** எம். கல்லூப்பட்டி அருகே வாகன சோதனையில் ஈடுபட்ட பெண் எஸ்.ஐ. ஆனந்தி வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தார். அவ்வழியாக காரில் வந்த சுந்தரபாண்டியன் (29), சின்னா(51) சுரேஷ்(25) குருவம்மாள்(25) நான்குபேரும் எஸ்.ஐ. ஆனந்திக்கு கொலை மிர.ட்டல் விடுத்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை மிரட்டல் | தினகரன் |
| 1078. | 22.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** தேவகோட்டை புதூர் அக்ரஹரத்தில் தர்மமுனீஸ்வரர் கோவில் அருகே பிறந்து 4 நாட்களே ஆன ஆண்குழந்தை கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1079. | 22.4.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை கல்லறை தோப்பு தெருவைச் சேர்ந்த ரமேஷ்(42) சீர்காழி அருகே ராம்நகர் பெயரில் வீட்டு மனை விற்பனை நடத்தி வருகிறார். அந்த பகுதியில் மின்சார ஒயர்களை சீரமைக்க மின்வாரிய அலுவலக என்ஜினியர் ராமச்சந்திரனை அணுகினார். அவர் ரூபாய் 10 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக ரமேஷ் புகார். லஞ்சம் வாங்கும்போது அதிகாரிகளால் ராமச்சந்திரன் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |